கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும் மற்றும் 2016 ஒக்தோபர் 04 ஆம் திகதிய அமைச்சரவை அமைச்சர்களின் அங்கீகாரத்திற்கிணங்க செயற்திட்ட கண்காணிப்பு பிரிவொன்று MMDE இன் கீழ் நிறுவப்பட்டது. நிதியளிப்பு செய்யப்பட்ட செயற்பாட்டு உடன்படிக்கையின் (FAA) உட்பிரிவு 3 இன் பிரகாரம், நிதியளிக்கப்பட்ட செயற்பாட்டிற்கு நிதியளித்து உதவுவதற்கும், அதன் நோக்கத்திற்காகவும் ஐ.அ.டொலர் 38.084 பில்லியன் தொகையொன்று அமுலாக்கல் நிறுவனத்தினால் (UNDP) நிறைவேற்றல் நிறுவனத்திற்கு (MMDE) மானிய வடிவில் விடுவிக்கப்படும். கடந்த மூன்று ஆண்டுகளில் UNDP இற்கு ரூபா 3,774 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 20.4 மில்லியன் தொகையினை பசுமை காலநிலை நிதியம் விடுவித்திருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 வரையிலும் ரூபா 1,020 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 5.7 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது மற்றும் ஐ.அ.டொலர் 14.7 மில்லியன் மீதியானது செயற்திட்டத்தின் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு UNDP இனால் செலவிடப்பட்டிருந்தது.

மொத்த விடுவிப்புக்களில் 28 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நிறைவேற்றல் நிறுவனத்திற்கு (MMDE) விடுவிக்கப்பட்ட தொகைக்கு மாத்திரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டிருந்தமை காரணமாக ஒட்டுமொத்த செயல்திட்டத்தின் நிதி செயலாற்றல் மற்றும் நிதிநிலைமை என்பன பிரதிபலிக்கவில்லை மற்றும் எனது கணக்காய்வு வேலை MMDE இனால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்திடமிருந்து (UNDP) ரூபா 1,020 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 5.7 மில்லியன் மற்றும் GOSL இடமிருந்து ரூபா 290 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 2 மில்லியன் என்பன 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மகாவலி அபிவிருத்தி | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுகளின் மூலம் இரண்டு தரப்பினர்களாலும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அடையாளம் காணப்படல் வேண்டும். |

## 3.2 தள ஆய்வுகளின் போதான அவதானிப்புக்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நிதி செயற்பாட்டு உடன்படிக்கை (FAA) இன் பிரகாரம் 325, குளங்கள் (Tanks) மற்றும் 50 அடுக்குகளில் (cascades) உள்ள நீர்த்தேக்கங்கள் (reservoirs) என்பவற்றை மறுசீரமைப்பு செய்வதற்காக ஐ.அ.டொலர் 15.6 மில்லியன் தொகையொன்று செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 17 அடுக்குகளில் உள்ள 225 குளங்கள் மாத்திரம் 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மறு சீரமைப்பு செய்யப்பட்டிருந்தன. இதன் பிரகாரம், மீதமுள்ள குளங்களின் மறுசீரமைப்பு வேலையினை எஞ்சிய செயற்திட்ட காலப்பகுதியின் போது பூர்த்தி செய்ய முடியுமா என்று சந்தேகம் எழுந்துள்ளது. | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தரப்பட்ட தகவல்களின் பிரகாரம், குளமொன்றிற்கு தலா ரூபா 8.26 மில்லியன் தொகையினை செயற்திட்டம் ஒதுக்கீடு செய்தது. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டமானது குளங்களை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தியதுடன் நீர்வீழ்ச்சிகளில் உள்ள குளங்களுடன் இணைக்கும் கால்வாய்களை மறுசீரமைப்பு செய்வதன் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | ஒட்டுமொத்த செயற்திட்டத்தின் குறிக்கோளினை நிறைவேற்றுவதற்கு தேவையான நடவடிக்கையினை எடுக்க வேண்டும். |
| (இ) | செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து அண்ணளவாக 03 வருடங்கள் கடந்திருந்த போதிலும், வனப் பாதுகாப்புத் திணைக்களம், வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் ஆகியவற்றில் இருந்து 22 குளங்களுக்கான உரிய அனுமதிகளினை பெற்றுக் கொள்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதன் விளைவாக சில தொடர்படு அடுக்குகள் (Cascades) பூர்த்தி செய்யப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | உரிய காலப்பகுதிக்குள் வரிசை திணைக்களங்களிடமிருந்து உரிய அனுமதியினை பெற்றுக் கொள்ள தேவையான நடவடிக்கையினை எடுக்க வேண்டும். |

**3.3 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 வரையிலும் செயற்திட்டத்தின் பாதீட்டு ஒதுக்கம் ரூபா 1,807.4 மில்லியனாக இருந்ததுடன் மொத்த செலவு ரூபா 2,181.3 மில்லியனாக இருந்தது. இதன் பிரகாரம், முறையான அங்கீகாரம் இன்றி ஒதுக்கத்திற்கு மேலதிகமாக ரூபா 373.9 மில்லியனினை செயற்திட்டம் செலவு செய்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | நிதிகளை செலவினம் செய்ய முன்னர் முறையான அங்கீகாரத்தினை பெறவும். |
| (ஆ) | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவினால் செயற்திட்டத்திற்காக இலங்கை மத்திய வங்கியில் விஷேட (டொலர்) கணக்கொன்று திறக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் பசுமை காலநிலை நிதியத்தில் இருந்து UNDP கணக்கிற்கே நிதி கிடைக்கப்பெற்றது. | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | மத்திய வங்கியில் முறையான கணக்கொன்றை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2020 டிசம்பர் 31 வரையிலும் இலங்கை அரசாங்கத்தின் மூலமான ரூபா 289.9 மில்லியன் தொகையும் பசுமை காலநிலை நிதியத்தின் மூலமான ரூபா 2,181.3 மில்லியன் தொகையும் செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது அனைத்து செலவினங்களையும் அரச பாதீட்டிற்கு அறிக்கையிட்டிருக்கவில்லை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புடைய செலவினங்களை மாத்திரம் அவர்கள் அறிக்கையிட்டுள்ளனர் என்று அவதானிக்கப்பட்டுள்ளது. | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. அதற்கமைவாக, பாதிப்புகளை குறைப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகளினை நீர்ப்பாசனத் திணைக்களம் எடுத்து வருகின்றது. | அரச பாதீட்டிற்கு அனைத்து செயற்திட்ட செலவினங்களையும் அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | FAA இன் உட்பிரிவு 7 இன் பிரகாரம், அறிக்கையிடல், கண்காணிப்பு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன அட்டவணை 04 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு எங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயல்முன்னேற்ற அறிக்கையினை |

